<u>பத்திரிக்கை குறிப்பு</u>

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சேலம் பிரிவு அலுவலகத்தை அணுகி, தனக்கு சொந்தமான நிலத்திற்கு தனது தாத்தா பெயரிலிருந்து அப்பா பெயருக்கு பட்டா பெயர்மாற்றம் செய்வதற்கு சேலம் மாவட்டம், பெத்தாம்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பித்ததாகவும், விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கைகாக சேலம் மாவட்டம், பெத்தாம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திருமதி விஜயலட்சுமி மற்றும் உதவியாளர் திரு.உதயகுமார் ஆகியோர் ரூ.3,500/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்பதாகவும், அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 27.09.2021 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது கிராம நிர்வாக அலுவலர் விஜயலட்சுமி மற்றும் உதவியாளர் திரு.உதயகுமார் ஆகியோர் புகார்தாரரிடமிருந்து ரூ.3,500/- கையூட்டாக கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்கள்.

# PRESS NOTE

The complainant approached Vigilance & Anti – Corruption, Salem detachment, and gave complaint that he had applied for Patta name transfer from his grandfather's name to his father's name for the land at Pethaampatti Village, Salem District, for which Tmt.Vijayalakshmi, Village Administrative Officer, Pethaampatti Village, Salem District and her Assistant Tr.Udayakumar demanded Rs.3,500/- as bribe for processing his application. In this connection a case was registered and a trap was organized today, 27.09.2021.

During trap proceedings, the accused Tmt.Vijayalakshmi, Village Administrative Officer, Pethaampatti Village, Salem District and her Assistant Tr.Udayakumar, reiterated their earlier demand and received the bribe amount of Rs.3,500/- from the complainant. Both accused were arrested.